உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி—உஎ.] விபவஹு மார்கழிமீ [பகுதி—உ.

Vol. XXVII. December-1928. January-1929. No. 2.


## பிரகிருதிசாஸ்த்ரம்.

## (PHYSICAL SCIENCE)


(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்

ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்திஐயரவர்கள் M.A., எழுதியது.)


### பௌதிகம் (Physics).

### IV. ஒலி (Sound).


[உசு-ம் தொகுதியின் ௩௦௬-ம் பக்கத் தொடர்ச்சி].


### ஒலியளவியல் (Acoustic Measurements).

இவ்வியல் பெரும்பான்மையும் பரிசோதனைப் பகுதியாகும் (Experimental). இசையொலிக்கு முக்கிய இலக்கணங்கள் பொருளைக் கடந்துசெல்லும் வேகம் (Velocity), அலைநீளம் (Wave length), துடிப்பெண் (Frequency), உறைப்பு (Intensity), நிறம் (Colour or Quality) என்பனவேயாம். இவற்றுள் நிறம் ஒன்று நீக்கலாக மற்றவை இவ்வொலியளவியலில் ஆராயப்பெறும். சாவியவின்கண்ணே (Consonance and Temperament) நிறத்தின் ஆராய்ச்சி நிகழ்த்தப்பெறும்.

வேகம் அளத்தல் (Determination of Velocity):— ஒலி பற்பல பொருள்களினூடே பற்பல வேகங்களுடன் செல்லுகிறது. ஒருசில பொருள்களுக்குரிய வேகங்கள் கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ளவாறு:—

அட்டவணை IV. (TABLE IV).

| பொருள் | வாயு Air | தண்ணீர்வாயு Hydrogen | தண்ணீர் Water | தாமிரம் Copper | இரும்பு Iron |
|---|---|---|---|---|---|
| வேகம் (செக்கண்டுக்குஇத்தனை அடி எனக்கொள்க). | 1,087 | 4,193 | 4,714 | 11,670 | 16,820 |

இவ்வட்டவணையில் ஒலியானது, வாயுவில் செக்கண்டுக்கு சுமார் $1\frac{2}{3}$ பர்லாங்கு வேகத்துடனும், இரும்பினில் செக்கண்டுக்குச் சுமார் $25\frac{1}{2}$ பர்லாங்கு வேகத்துடனும் செல்லவல்லது என்பது விளங்கும். ஆகவே, இரும்பினில் ஒலியின்வேகம், காற்றினுள்ளதைக்காட்டிலும் சுமார் பதினைந்துமடங்கு அதிகம் என்பது கிடைக்கும். எனவே, ஒருவன், இருப்புப்பாதையில் நின்றுகொண்டு $25\frac{1}{2}$ பர்லாங்குதூரத்தில் வந்துகொண்டிருக்கும் புகைவண்டியின் அரவத்தைக் கேட்பானாகின், அவ்வொலியானது வண்டியிலிருந்து புறப்பட்டு அவன்காதில் வந்து வீழ்வதற்குவேண்டியகாலம், வாயுவினூடே சுமார் 15 செக்கண்டும், இருப்புத் தண்டவாளத்தினூடே சுமார் ஒரு செக்கண்டுமேயாகும். ஒலியலைகள் காற்றினூடே வெகுநேரம் நீட்டித்துச் செல்லுதலால், அவற்றின் அசைவுகள் வரும் வழியிலேயே மெலிந்துபோய் மனிதனுக்குப் புலனாகாமற்போதலுங்கூடும். ஆனால் இதே ஒலியானது தண்டவாளத்தில் வெகுசீக்கிரமாகச் செல்லுதலால், அலைகளின் அசைவுகள் சிதைவின்றிக் காதுக்குவந்து சேர்தல் எளிதிற்கூடும். எனவே, தூரத்திற் புகைவண்டி வருவதை நின்றுகேட்டால் உணரமுடியாதபோதிலும், கீழேகுனிந்து காதினைத் தண்டவாளத்தில் வைத்துக் கேட்டால் வண்டியின் அரவம் எளிதினுணரப்பெறும். முற்கூறிய உதாரணமாகிய வாலிபரது நூல்தந்தியும் இவ் வேகவித்தியாசத்தையே அடிப்படையாகக்கொண்டிருக்கிறது.

இனி, வாயுவில் ஒலி செல்லும்வேகத்தைக் கண்டுபிடிப்பதற்கேற்றதோர் எளியமுறையைக் கூறுவோம். இக்காலத்துள்ள நுண்ணிய பரிசோதனைமுறைகள் எளிதின் விளங்காவாதலின், ஓர் ஆங்கிலசாஸ்திரியார் முதன்முதலாக அநுட்டித்த முறையைக் கூறுவதே பொருந்தும். கி. பி. 18ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், டேர்ஹாம் (Derham)

என்னும் பரிசோதகர் ஒரு ஆராய்ச்சியை நிகழ்த்தினர். பிளாக்ஹீத் (Blackheath) என்றதோரிடத்தில் ஒரு பீரங்கியானது வெடித்தது. பிளாக்ஹீத்துக்கு 12½ மைலுக்கப்பாலுள்ள அப்மின்ஸ்டர்கோயிலின் கோபுரத்தில் (Upminster Church Tower) நின்ற ஆராய்ச்சியாளர், வெடியினது நெருப்புச்சுவாலையைக் கண்ணுற்பார்க்கும் தருணத்திற்கும், வெடியொலியைக் காதினுற் கேட்கும் தருணத்திற்கும் இடையே சென்ற காலத்தை ஒரு நுண்ணிய கடிகாரத்தைக் கொண்டு அளவிட்டார். முதன்முதலில் வெடியின்வெளிச்சந் தோன்றி, சுமார் ஒருநிமிட நேரங்கழித்து வெடியின் ஒலி கேட்டது. ஒளியினதுவேகம் செக்கண்டுக்கு 1,86,000 மைல் ஆதலின், வெடியுண்டானஇடத்திற்கும் ஆராய்ச்சியாளர் நின்ற இடத்திற்கு மிடையேயுள்ள 12½ மைல் தூரத்தை ஒளியானது கடந்துசெல்ல, ஒரு செகண்டில் சுமார் பதினையாயிரத்திலொரு பங்கு காலமே செலவாயிற்று. ஆனல், வெடியினது ஒளியும் ஒலியும் வந்து சேர்வதற்கிடையே நிகழ்ந்த காலமோ சுமார் 58 செக்கண்டு அளவுபெற்றது. ஆதல்பற்றி, ஒளியானது கட்புலனானதருணமே, ஒலியானது பீரங்கியைவிட்டுப் புறப்பட்ட தருணமாகக் கொள்ளப்பட்டது. எனவே, வாயுவில் 12½ மைல்தூரத்தை ஒலி கடந்து செல்வதற்கு 58 செக்கண்டு காலம் வேண்டும் என்பது கிடைத்தது. ஒலி கடந்துசென்ற தூரத்தைச் செலவான காலத்தின் எண்ணால் வகுத்து வாயுவில் ஒலியின்வேகம் செக்கண்டுக்கு சுமார் 1140 அடி எனக் கணக்கிடப்பட்டது.

அலைநீளம் (Wave length), துடிப்பெண் (Frequency), உறைப்பு (Intensity):—வெவ்வேறு பொருள்களினூடே ஒலி வெவ்வேறு வேகங்களுடன் கடந்துசெல்லுதலால், ஒரு குறிப்பிட்ட துடிப்பெண்ணுள்ள இசையொலியானது, அவற்றினுள் வெவ்வேறு நீளங்களுள்ள அலைகளை உண்டாக்கும். அதாவது அலைநீளம் (Wave length) பொருளுக்கேற்றவாறு வித்தியாசப்படும். ஒரு துடிகோல் கிளப்பும் சுரமானது, அத்துடிகோலினது துடிப்பெண்ணினை (Pitch) அநுசரித்து நிற்கும். அந்த சுரத்தின் உறைப்பு அல்லது கனம்(Intensity) அத்துடிகோலினது ஆட்டவிரிவை(Amplitude) அநுசரித்து நிற்கும். ஒலியினது கனம் மிகக்குறைந்தால் அது செவிப்புலனாகாது. மேலும், துடிப்பெண் 16க்குக் குறைந்தும், 38,000-த்துக்கு அதிகரித்துமுள்ள

ஒலிகளைக் கேட்பதற்கியலாது. இத்தகைய முடிவுகளையளித்த ஆராய்ச்சிகள் சற்றுக் கடினமாதலால், அவற்றை இங்குக் கூறாது விடுவோம்.

ஒலிக்கருவியியல் (Acoustic Instruments).

இவ்வியலில், ஒலிக்கருவிகளின் அமைப்பும் அவை இயங்கும் வகைகளும் ஆராயப்பெறும். ஒலிக்கருவிகள் நான்குவிதம். அவை முறையே கழிக்கருவிகள் (Rods), கம்பிக்கருவிகள் (Strings), தகட்டுக்கருவிகள் (Plates), வாயுக்கருவிகள் (Air columns) என்பனவாம். உதாரணங்கள் பின்வருமாறு:—

கழிக்கருவிகள்—இசைக்கவடு (Tuning Fork) முதலியன.

கம்பிக்கருவிகள்—பிடில், பியானோ, வீணை முதலியன.

தகட்டுக்கருவிகள்—குடமுழா (Kettledrum) மிருதங்கம், கோயில்மணி முதலியன.

வாயுக்கருவிகள்—புல்லாங்குழல், நாகசுரம், ஆர்கன் (Organpipe) முதலியன.

இவற்றுட் சிற்சிலவற்றின் குணாதிசயங்களைக் கவனிப்போம்.

கழிக்கருவிகள்: இசைக்கவடு (Tuning Fork):—இதனைச் சங்கீதவித்துவான்கள் தமது வாத்தியங்களைச் சுருதிசேர்க்க உபயோகிக்கிறார்கள். இசைக்கவட்டின் அமைப்பு, படம் 38ல் வரைந்துகாட்டியவாறு. ஒரு எஃகுக்கழியானது வ க ட வென்னும் கவட்டுருவாக வளைக்கப்பட்டிருக்கிறது. கவட்டின் மையமாகிய கவில் கப்வென்னும் கால் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்காலின் அடிப்பாகத்தில் மறைகள் (Screwthreads) செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கவட்டினைத் தனியாக உபயோகித்தாலும் உபயோகிக்கலாம். வேண்டுமானால் பெ பெ என்று குறிக்கப்பட்ட ஒலிவாங்கியின்மேல் (Resonator) இருகிவைத்தாலும் வைக்கலாம். கவட்டினது கைகளாகிய கவ, கட என்ப



படம் 38.

வற்றுள் யாதானுமொன்றை ஒருநெட்டிச்சுத்தியால் (Cork hammer) தட்டினல், இருகைகளும் துடித்துக் கவட்டினது நீளத்திற்கும் பருமனுக்கும் ஏற்றதோர் இசையைக் கிளப்பும். பே பே யென்னும் ஒலிவாங்கியானது (Resonator) ஒரு குறிப்பிட்ட அளவு உள்ளிடங்கொண்ட (of a measured internal capacity) மரப்பெட்டியாகும். இவ்வொலிவாங்கியானது, இசைக்கவட்டின் ஒலியை ஏற்றுத் தானும் இயங்கி ஒலியினது உறைப்பினை அதிகப்படுத்துகின்றது. ஒலிவாங்கியுடன் சேர்க்கப்பெறுது இயங்கும் இசைக்கவட்டினது ஒலி சற்று மெலிவாகவேயிருக்கும். ஒலிவாங்கியின் உள்ளே நிரம்பிநிற்கும் காற்றுனது இசைக்கவட்டினது அசைவுகளை வாங்கிக்கொண்டு அதனோடு துடித்தலால் ஒலியினது உறைப்பு (Intensity) அதிகப்படுகின்றது.

கம்பிக்கருவிகள்:—இவற்றைப்பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் பற்பலவாகும். அவற்றுட் சிலவற்றையே கூறுவோம். ஒரு பிடிலில் கம்பியினது நீளத்தை அதிகப்படுத்தினுல், அதனுடைய துடிப்பெண் (Pitch) குறைந்து சுரம் மந்தப்படும். ஆணியை முடுக்கி ஒரு கம்பியினது பிணிப்பை (Tension) அதிகப்படுத்தினுல் சுருதியானது ஏறிச் செல்லும். ஒரு கம்பியின்மீது மெல்லிய பட்டுநூலைச் சுற்றி அதனுடைய பருமனை அதிகப்படுத்தினுல், சுருதி குறைந்துபோம்.

தகட்டுக்கருவிகள்:—மிருதங்கம், குடமுழா முதலியவற்றில் ஒரு தோலானது பிணிக்கப்பட்டிருக்கிறது. அத்தோலின்மீது கொட்டுதலால் அது துடித்து ஒலியை உண்டாக்குகின்றது. இத்தகைய வாத்தியங்களில் கொட்டுதற்குரியதோலினது இடப்பரப்பை அதிகப்படுத்திலுல் சுருதி தாழ்ந்துபோகும். தோலினை அதிகமாக வலித்துப் பிணித்தால் சுருதி உயர்ந்துசெல்லும்.

வாயுக்கருவிகள்:—ஊதுங்கருவிகளெல்லாம் வாயுவினுல் இயங்குகின்றன. இக்கருவிகளின் உட்புறத்தேநிற்கும் வாயு அசைந்து ஒலியை உண்டாக்குகின்றது. கருவியிலுள்ள வாயுவைத் திறந்தோ அல்லது மூடியோ இவ்வாயுவினது அளவை மாற்றுதலால், சுரங்களின் வித்தியாசங்கள் நிகழ்கின்றன. ஒரு புல்லாங்குழலை எடுத்துக்கொண்டால் துவாரங்கள்யாவும் மூடியிருக்கும்பொழுது கருவியின்கண் அசையும் வாயுப்பகுதி குழல்முழுதும் நிற்கும். யாதானுமோர் துவாரத்தைத்

திறந்தால், அசையும் வாயுப்பகுதி அந்தத் துவாரமானது எவ்வளவு தூரத்திலுள்ளதோ அம்மட்டில் அடங்கிநிற்கும். எனவே அசையும் வாயுப்பகுதி முன்னுள்ளதைக் காட்டிலும் இப்பொழுது குறைவு என விளங்கும். இவ்வாயுப்பகுதியினது நீளம் குறையக் குறையச் சுருதியானது மேன்மேல் உயர்ந்துபோகும். அதாவது குழலின் இறுதியிலிருந்து துவாரங்களை ஒவ்வொன்றாகத் திறந்துசென்றால் சுருதி ஏறிக்கொண்டே செல்லும்.

## சுரவியல் (Consonance and Temperament).

இவ்வியலானது, சங்கீதத்தில் வழங்கிவரும் ஸ்தாயிகளின் (Scales) வரலாற்றினைக் கூறும். இடையே சுரங்களின் முக்கிய இலக்கணமாகிய நிறமும் (Colour or Quality) ஆராயப்பெறும்.

சுரஸ்தாயிகள் (Musical Scales):—மேலைநாட்டாருள் பூர்வீகமாக ஏற்பட்டது பைதாகோரஸ் (Pythogoras) என்ற கிரேக்க ஆசிரியரின் ஸ்தாயியே யாகும். இந்த ஸ்தாயியை ஆங்கிலத்தில் டயடானிக் ஸ்கேல் (Diatonic scale) என வழங்குவார்கள். பைதாகோரஸின் ஸ்தாயி கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ளவாறு. சுரங்கள் தத்தமது குறியீட்டு எழுத்துக்களோடும், துடிப்பெண்களோடும் கூறப்பட்டுள்ளன.

அட்டவணை V (Table V).

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுரம். | C | D | E | F | G | A | B | C |
| துடிப்பெண். | 24 | 27 | 30 | 32 | 36 | 40 | 45 | 48 |
| இடைவெளி. | 1 | $\frac{9}{8}$ | $\frac{5}{4}$ | $\frac{4}{3}$ | $\frac{3}{2}$ | $\frac{5}{3}$ | $\frac{15}{8}$ | 2 |

இவ்வட்டவணையில் மூன்றாம்வரியிற் காட்டப்பட்டுள்ள எண்கள் ஒவ்வொரு சுரத்தின் துடிப்பெண்ணும் ஆதாரசுரமாகிய C யினது துடிப்பெண்ணைக்காட்டிலும் எத்தனை மடங்கு அதிகமென்பதைக் காட்டுகின்றன. இந்த எண்களுக்கு இடைவெளி (Interval) எனப் பெயர். ஒரு சுரத்தினது துடிப்பெண்ணை மற்றொன்றின் துடிப்பெண்ணால் வகுத்துவரும் ஈவுக்கு, இவ்விரண்டு சுரங்களுக்கு நடுவிலுள்ள இடைவெளி எனப் பெயர். இக்காலத்தில் மேலைநாட்டார் தமது சங்கீதத்தை ஏட்டிலெழுதிவைக்கும் நன்மையையும் இதர நன்மைகளையும் கருதி,

பைதாகோரஸின் சுருதிமுறையை ஒரு சிறிதளவு மாற்றிச் சம இடைவெளிபெற்ற ஸ்தாயி (Equal Temperament) என்பதை அநுசரித்து வருகிறார்கள். A. J. எல்லிஸ் என்பாரியற்றிய "எல்லிஸ் ஹார்மோனிகா" என்ற வாச்சியத்தில், ஒரு ஸ்தாயிக்குள் 54 சுரங்கள் அடங்கியிருக்கின்றன. இதில் ஒவ்வொருசுரத்திற்கும் அதற்கடுத்தசுரத்திற்குமுள்ள இடைவெளி ஒரேயளவினதாயிருக்கும்.

நமது நாட்டில் சங்கீதவித்வான்கள் பெரும்பான்மையாக, ஒரு ஸ்தாயியில் 22 சுருதிகள் எனக் கொள்ளுகிறார்கள். இவற்றுள் இடைவெளிகள் பற்பலவாயிருக்கின்றன. காலஞ்சென்ற ஸ்ரீமான் ஆபிரகாம் பண்டிதரவர்கள் இந்திய சங்கீதத்தில் ஒரு ஸ்தாயிக்கு 24 சுருதிகள் என்றும் அவைகள் சம இடைவெளிகளுள்ளனவென்றும் கருதியுள்ளார். அவரது கொள்கைப்படி இந்திய சங்கீதமும் மேலநாட்டுச் சங்கீதத்தைப் போலவே எழுத்துருவில்வைக்கும் திறமுடைத்தாகும். சுருதிகளின் விஷயமாக, அவரது ஆராய்ச்சிகளைப் பண்டிதரியற்றிய "கருணாமிருத சாகரம்" என்னும் நூலிற் பரக்கக் காணலாம்.

நிறம் (Quality or colour):—இனி "நிறம்" என்பதைச் சற்று விளக்கிக்காட்டி ஒலியினது விஷயத்தை மூடிப்போம். நிறம், குணம், நாதக்கட்டு, ஒலிச்சுவை, இசைநலம் என்பன ஒருபொருட்கிளவிகள். ஒரு பிடில், ஒரு வீணை, ஒரு புல்லாங்குழல் ஆகிய இம்மூன்றையும் முறையே எடுத்து ஒவ்வொன்றிலும் ஒரே சுரத்தை உண்டாக்கினால், அச்சுரங்களின் துடிப்பெண் (Pitch) ஒன்றேயானாலும், அவை வெவ்வேறு மாதிரியாக உணரப்படுகின்றன. ஒருவன் கண்ணைமூடிக்கொண்டு காதினாற்கேட்டவளவிலேயே இது பிடிலின் ஒலி, இது வீணையொலி, இது குழலின் ஒலி என எளிதில் தெரிந்துகொள்வான். இதற்குக் காரணம் இம்மூன்று ஒலிகளுக்குமுள்ள சுவைவித்தியாசங்களே யாகும். ஒவ்வொரு வாத்தியத்திலிருந்து எழும்பும் சுரத்திற்கும் ஒரு தனிப்பட்ட சுவை இருக்கின்றது. இச்சுவையே நிறம் (Colour, Quality or Timbre) எனப்படுகின்றது. ஒரு சுரத்திற்கு நிறம் எதனாலேற்படுகிறதென்பதை ஒரு ஜெர்மானியசாஸ்திரியாகிய ஹெம்ஹோல்ட்ஸ் (Helmholtz) என்பவர் ஆராய்ந்துள்ளார். அவரது ஆராய்ச்சியின்படி, ஒரு வாத்தியத்தில் 256 என்னும் துடிப்பெண்ணையுடையதோர்

ஒலியை எழுப்பினல், பிரதானமாக உறைத்து' இசைக்கும் ஒலி 256 துடிப்பெண்ணுடையதேயாஞலும், அதோடுகூட 2×256, 3×256, 4×256,..........முதலிய துடிப்பெண்களையுடைய சுரங்களும் உண்டாகி ஆதாரசுரத்தையடுத்த பரிவாரங்களாகச் சேர்ந்து ஒலிக்கின்றன. இப் பரிவாரங்களின் (Upper partials) எண்ணிக்கைக்கும், அவற்றின் தனித்தனி உறைப்புக்களுக்கு மேற்றவாறு, தலைமைபற்றிய சுரமானது தனது நிறத்தைப் பெறுகின்றது. பிடில்போன்ற வில்லினுலிசைக்குங் கருவிக்கும், வீணைபோன்ற விரலினுலிசைக்குங் கருவிக்கும், குழல் போன்ற காற்றினுலிசைக்குங் கருவிக்கும் உள்ள நிற வித்தியாசங்கள், ஆதாரசுரத்தைப் பின்பற்றித் தொடரும் பரிவாரங்களின் வித்தியாசங் களினுலேயே உண்டாகின்றன.

ஒலியும் சக்தியின் பரிபாகமே (Sound is a form of Energy):— இதுகாறும் ஒலிநூலினது பகுதிகளைச் சுருக்கமாகக் கூறினேம். ஒலி யுற்பத்தியாகுமிடத்தில் ஒரு பொருளானது துடிப்புக்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. ஒருவன் பிடிலை வாசிக்கும்பொழுது ஒரு வில்லினுற் கம்பியை உராய்ந்து, உராய்வு இழுப்புக்களை (Forces of Friction) எதிர்த்து வேலையை இயற்றிக்கொண்டிருக்கிறுன் (doing work). இந்த வேலைசக்தியானது துடித்துக்கொண்டிருக்கும் கம்பியில் வேக சக்தியாகிறது (becomes Kinetic Energy). இந்த வேகசக்தியா னது பிடிலைச்சுற்றியுள்ள, வாயுவில் அலைகளையுண்டாக்கி வியாபித்துச் சென்று கேட்பவர்காதிற்குவந்துசேர்ந்து காதினுள்ளேயிருக்கும் ஒரு ஜவ்வினைத் துடிக்கச்செய்கின்றது. இந்தத் துடிப்பே ஒலியாக உணரப் படுகின்றது. பிடில்வாசிப்பவன் இயற்றுகின்ற வேலைசக்தியானது (Work Energy) இவ்வாறு ஒலியென்னும்சக்தியாக (Sound Energy) மாறுகின்றது. எனவே, ஒலியானது சக்தியின்பரிபாகம் என்பது ஒருவாறு விளங்கும்,

(தொடரும்)

ஸ்ரீ:

# குருபரம்பரை.

## எம்பெருமானார்வைபவம்.

[௧௬-ம் பக்கத் தொடர்ச்சி.]

அந்நாளிற்றிருக்கோட்டிநம்பியருளரங்கத்திற்
பொன்னாருந்திகிரியினான்பூங்கழல்கடொழப்போந்து
தென்னாற்றங்கரையருகிற்செறிந்தனராங்குடையவரும்
தன்னாவித்துணையாயதமரோடுநீராட. (௯௩௯)

சீராருங்காவிரியிற்செழும்புனலிற்சென்றிறங்கி
யோராருந்திருக்கோட்டிநம்பியைக்கண்டெதிர்கொண்டு
கூராழிசங்கேந்துங்கொண்டல்தொண்டக்குழாத்தோடு
மாராதகாதலொடுமோங்கவன்பூங்கழனோக்கி. (௯௪0)

### வேறு.

சென்றார்நம்பியுடையவரைத்திருந்தநோக்கித்திருமேனி
குன்றாநிலையாயறவாடிக்குறைதற்கேதுவென்னென்னக்
கன்றால்விளவின்கனியெறிந்தானனையாய்மாதுகராமுணவாய்
நின்றார்தமக்குமதினஞ்சநேராமென்னினிலையாமோ. (௯௪௧)

என்னநஞ்சங்கலந்திட்டாரியற்கைகூறித்திருவடியின்
மன்னிவிழுந்தானெதிராசன்மனைற்குடாற்றமாட்டாதே
பின்னமற்றதொண்டர்குழாம்பெருகவருந்தித்துன்பமுற
வுன்னிநம்பியெழுந்திரெனவுரைத்தாலன்றியாமெழுதல், (௯௪௨)

தீதியன்றென்றறக்கொதிக்குநெருப்பைநிகர்க்கும்வெண்மணலிற்
பேதியாதசிந்தையனுக்கிடந்தான்றெண்டப்பெருந்திரள்கள்
சோதிமணலிலடிச்சுட்டாற்றுள்ளிப்புடைத்தார்நம்பியுமிங்
கோதிலிவனுக்குரியார்களுண்டோகாணவேண்டுமென, (௯௪௩)

நின்றானெழுந்திரென்னுமனெறிசேர்கிடாம்பியாச்சானுஞ்
சென்றானங்கோவவளிட்டாஞ்சிற்கொடிதோதேசிகனார்
குன்றாவருடானெனக்கூறிக்கோதிலெதிராசன்றன்னைச்
சென்றாங்கெடுப்பநம்பியர்தமேலோன்றிருக்கைதனைப்பிடித்தே. (௯௪௪)

### வேறு.

எப்பொழுதுநீயிவனுக்*கின்றுமுதலின்னடிசில்
தப்பறவேசமைத்தளித்துத்தான்வருதிதாரணியில்
ஒப்பொருவரில்லாதாயெனவுரைத்தாங்கவரோடும்
அப்பொழுதேபோயரங்கத்தம்மானையடிபணிந்தார். (௬௪௫)

### வேறு.

சீரியமுதலியாண்டான்றிருமடைப்பள்ளிசேர்ந்தக்
காரியஞ்செய்துநாளும்வைகவக்காலந்தன்னிற்
கூரியசிந்தையாழ்வான்கோதறுமுதலியாண்டான்
பேரியன்ஞானசாரஞ்செய்தவப்பெரியோனுதி. (௬௪௬)

### வேறு.

சிட்டர்களையழைத்தருளிச்சீரியீர்முன்பிலிங்கத்
திட்டபுராணத்தவரென்றெழின்மாறனெடுத்திசைக்கப்
பட்டமறுசமயமெனும்படுகுழியைத்தூர்த்தவர்க
ளிட்டமுறுநூல்களையுமெரியிலிடுபஞ்சாக்கி. (௬௪௭)

### வேறு.

வேதமுடிவில்வீற்றிருந்துவிளங்குந்தத்வமசியென்ன
வோதும்வாக்கியத்தர்த்தமுயிரும்பரமுமொன்றேயாம்
பேதமில்லையென்று [illegible] களையும்புறமிடுவித்
தேதங்கெடும்வன்னாச்சிரமவநுட்டானத்திவிசைரூபம். (௬௪௮)

ஆனகன்மமநுட்டித்தாலாதிமுதற்குமாருயிர்க்கு
மூனமானபேதமறுமபேதமாகியொன்றாகும்
ஈனமறவங்கவையறிதவிலங்குமுத்தியெனவிசைக்கு
நானென்றெங்குந்தனைத்தானேநசிக்கப்பண்ணிப்பிறந்துழலும். (௬௪௯)

மதிகேடரையுமறத்துறந்துமாசிலாதமறைநான்கின்
விதியைவழுவாக்கன்மமுடன்மெய்ஞ்ஞானமுமென்றிவையிரண்டு
மூதியதுணையாவெழும்பத்திமுத்திக்குபாயமெனவிறையைத்
துதிசெய்துரைக்குமாரணத்தின்முடிவையிந்தத்தொல்லுலகில். (௬௫௦)

தங்குமேலோர்நிர்துய்வான்றாபித்திடுதல்வேண்டுமெதற்
குங்கணினைவிலுதித்தமையேதுரைமினென்றானிராசன்
பங்கமில்லாப்பாகவதர்பலகால்வாழ்த்திப்பணிந்தெழுந்திங்
கெங்களாவிக்குறுதுணையேயார்க்குமிதமாமிதுவென்றார். (௬௫௧)

---

* இன்பமுறுமின்னடிசில் (பிரதிபேதம்.)

ஆனாலதற்குவேதாந்தநடக்கவேண்டுமென்றெங்குந்
தானாய்நின்றவெதிராசன்சதுவேதத்தின்சாரத்தாற்
றேனார்கமலத்திருவுகப்பச்சீபாடியமுந்தீபமுமெய்
வானார்முத்தர்புகழ்சாரமென்னவகுத்தமூன்றினையும். (௬௫௨)

அருளிச்செய்தாரதுகேட்டவன்புமிக்கமுதலிகளுந்
தெருளுற்றிலங்குமெதிராசன்றன்னைநோக்கிச்செப்புமிதன்
பொருளிற்றுணிவிற்செலின்றாமன்னஞ்சொன்னவுபாயம்புகறுணையாய்
மருளற்றிறைவன்றனைப்பற்றலரிதாமென்னமிகமலங்க. (௬௫௩)

வேறு.

அத்திறங்கண்டவெதிகணாயகனாஞ்சன்மின்மாதவனென்றென்
றெத்திறத்தீருமோதவல்லீரேயெளிதின்வீடெய்திடுமென்ன
மெய்த்திறமாறன்பிரபத்திமார்க்கம்விளம்பியதிறத்தினைவிரகாற்
கெத்தியத்திரயத்தருளியன்றவர்கள்சோகமுங்கெடும்படிசெய்து. (௬௫௪)

வேறு.

இறைவனையுயிர்பெறவெண்ணிற்றாராமா
ஸ்ரீக்ஷறீனையுமவன்பெறின்முடிகுந்தன்மையுங்
குறையிலான்புகிலிவனவனைக்கூடிடுந்
துறையையுமருள்செயத்துள்ளியாடியே. (௬௫௫)

வேறு.

முதியநான்மறையினர்தமாய்ப்பொன்றாமுத்தியாய்நித்தவுத்தமமாய்
விதிசிவன்சனகனாதியோர்களுக்கும்விளம்பவுமரியமெய்வீட்டை
யெதிகணாயகனேயெளிதினிலெங்கட்களித்தமைக்கின்றுகைம்மாறு
மதியினானோக்கிற்காண்கிலோமென்னமனங்களித்தன்பொடும்வணங்கி. (௬௫௬)

வேறு.

எண்ணருங்காதலரிவணஞ்செய்தபின்
மண்மிசைப்பின்னையும்வணங்கியேத்திநற்
புண்ணியம்போன்றுளாய்புகல்வதொன்றுள
திண்ணமாயறியெனவிறைஞ்சிச்செப்பினார். (௬௫௭)

ஏதவையுரைமினென்றெதிகணாயகன்
ஓதினன்முதலிகளுரைப்பருத்தம
வேதமார்க்கத்தினின்வேறுபட்டுள
தீதுறுநிலையெலாஞ்சிதையப்பண்ணினார். (௬௫௮)

ஆதலாலினி*யுனதன்பரோடுநீ
தீதிலாநன்னெறிகாட்டிச்சீர்பெற
வோதியதிசை†தொறுஞ்சென்றுனுண்மையை
மாதவக்குன்றமேகாட்டிவையகம். (௬௫௯)

அனைத்தையுந்திருத்திடல்வேண்டுமாலென
வினைக்கடல்கடந்தவர்விளம்பமெய்ம்மையீர்
நினைத்ததுநலனதற்கெழுமினீரெனத்
தனைத்தனக்கொத்தவன்சாற்றியாங்கவர். (௬௬௦)

உடனெழுந்தரங்கனையிறைஞ்சியுத்தம
திடமுறநீயெனக்களித்தசெல்வத்தைக்
கடல்புடைசூழ்புவியெங்குங்காட்டிநின்
இடவகைதொறும்புகுந்தேத்திமீண்டிட. (௬௬௧)

ஆசையுற்றேனதற்கருள்கநீவிடை
யீசவென்றிறைஞ்சினனிறைவனன்றலைவ
தேசுறுகுணத்தினாயவணஞ்செய்கென
மாசிலாமணிவிடைகொடுப்பவள்ளலும். (௬௬௨)

அன்பர்கள்தொழுதெழவரங்கனார்தமை
யின்புறவலஞ்செய்தாங்கிறைஞ்சியேத்திமால்
முன்புறுதென்றிசைநோக்கிமுத்தனார்
துன்பறுதொண்டர்கடுதிப்பவேகினார். (௬௬௩)

நடந்தனரரங்கமாநகரில்யாவருந்
தொடர்ந்தனருடன்செலத்துணிந்துசீரிய
தடம்புனற்காவிரிக்கரையைச்சார்ந்துநின்
றிடம்படுசிந்தையாரிதயத்தெண்ணுவார். (௬௬௪)

உத்தமர்யார்க்குநம்மோடுபோதுவான்
சித்தமுண்டரங்கனைச்சேவித்தன்பினோ
டித்தலத்துறைபவர்யாருமில்லையிப்
பத்தரிலொருவரைப்பார்த்துநாமிவண். (௬௬௫)

இருமெனக்கூறினாலிதமலாததாம்
வருமபசாரமுமற்றெமக்கெனப்

* யுனக்கன்பரோடு (பி-ம்.)

† தொறுந்தொறுஞ்சென்றுண்மையை (பி-ம்.)

பொருவிலாநிலையினன்புந்தியுண்ணினைந்
தருமறைதுதிசெயவாங்குநின்றனன். (௬௬௬)

வேறு.

அத்திறத்தையருளாளப்பெருமாளெம்பெருமானார்
சித்தமுறநினைந்தருளித்தேசிகனார்திருவுளத்தை
யித்தலத்திலிருந்துவப்பித்திடுவதுநம்பணியென்னப்
பத்தர்தொழுமெதிநாதன்பாதுகைக்கீழ்விழுந்திறைஞ்சி. (௬௬௭)

தேசிகநீயெழுந்தருளித்திக்கனைத்துஞ்செயித்தவைசே
ராசறுத்துமீள்வளவுமரங்கரிணையடிவணங்கி
நீசனேன்றிருவரங்கத்திருக்கின்றேனெனநின்றான்
மாசிலாவெதிராசன்மற்றவனையுறத்தழுவி. (௬௬௮)

வேறு.

இத்தலத்திருந்தென்னாவியிறைவனைப்போற்றிநீயென்
சித்தநோய்தீர்த்தியென்னத்திருமுடிதடவவந்தப்
பத்தனுஞ்சிலவரோடும்பணிந்தெழுந்தரங்கம்புக்கா
னுத்தமக்குணத்தினோங்குமுடையவர்தொண்டர்சூழ. (௬௬௯)

வேறு.

தெண்டிரைநீர்ப்பொன்னியெனுந்தெய்வநதிகடந்தேகி
மண்டுபுனற்றலையருவிவளமிகுமாலிருஞ்சோலைக்
கொண்டலையுங்கண்டிறைஞ்சிக்கோதின்மெய்யத்தினிதமரும்
புண்டரிகக்கண்ணெம்மான்பூங்கழல்கள்புகுந்திறைஞ்சி. (௬௭௦)

வேறு.

சீரியதொண்டரோடுந்திருக்கோட்டியூரின்மன்னித்
தாரியன்மார்பனம்பிசரண்பணிந்தன்றவ்வூரி
லேர்பெறவிருந்தவெந்தையென்றுமந்நம்பிதுய்த்தாற்
பார்மிசையடிநூறிட்டுப்படுத்தபூவணையின்மன்னும். (௬௭௧)

அன்றிராப்பொழுதுந்துய்த்தாங்கடிகளாறிடுவான்மாட
முன்றினிநடக்குமெல்லைமுற்றுமுன்னிடையின்மீண்டார்
ஒன்றியகருணைமிக்கவுடையவரதனைநோக்கி
யின்றிவனுளத்திலொன்றுண்டெடுத்ததென்றிதயத்தெண்ணி. (௬௭௨)

வடித்தசீர்த்தமிழ்வேதத்தின்மாசிலாய்மனத்திலிப்பேர்
பிடித்ததோவெடுத்ததென்றான்பிரானெங்ஙனறிந்ததென்று

னடிப்படுநூறுநேரோநாளுமின்றைம்பதேயா
மடித்ததின்மடித்தாய்கண்டுகூறினேன்வாழ்வேயென்ருன். (கூஎங)

ஆங்கதுகேட்டநம்பியன்பனையுவந்துபுல்லித்
தாங்கியவுயிர்கடோறுந்தங்கியமுதலோவென்ன
வோங்கெதிபதியைவாழ்த்தவுளங்கரைந்துருகியன்னுன்
பூங்கழலிறைஞ்சிமாயன்பொன்னடிவணங்கிப்போனுன். (கூஎச)

போனவர்திருமோகூரிற்புனிதனைத்தொழுதன்றெந்தா
யானவான்பரலோகத்துக்காம்வழித்துணைநீயன்றே
தேனமர்துளபத்தாராயெனச்சொலிச்சிந்தைசெய்து
வானவர்வணங்குங்கூடன்மாயனைவணங்கிவாழ்த்தி. (கூஎரு)

வேறு.

ஆங்குநின்றும்விடைகொண்டேயாசிறிருப்புல்லாணிப்
பூங்கமலக்கண்ணனைப்போதத்தாற்புகழ்ந்திறைஞ்சித்
தேங்கமழ்பூந்தார்மார்பன்சேதுதரிசனம்பண்ணி
யோங்குபெருஞ்சிந்தையராய்த்திருத்தங்காலுறைமுகிலை. (கூஎசு)

சென்றிறைஞ்சியாங்குநின்றுஞ்சீவிலிபுத்தூர்புகுந்து
மன்றல்கமழ்கோதையையுமாயனையுமடிவணங்கி
யொன்றியசீரன்பினொடுமோங்குபுகழ்ப்பொதியமெனுங்
குன்றினின்றும்வரும்பொருநைவடகரைவைகுந்தத்தில். (கூஎஎ)

உறுமன்பிற்கள்வனைமற்றேங்குபிடர்கடிவாரை
மறுவறுஞ்சீர்த்தொண்டரொடும்வணங்கியருட்புளிங்குடியிற்
குறுகிமால்கழறொழுதாங்கேகவவ்வூர்க்குலமறையோர்
சிறுமியர்கள்சிலரெதிர்ந்தாரவரோடுஞ்சிறுமியர்காள். (கூஎஅ)

சீருமகிழ்மாறன்றேவர்தொழவீற்றிருக்குங்
காரார்பூம்பொழிற்குருகூர்காதமுண்டோவின்னுமதை
நேராகவுரைமினெனநெடுமாலுக்கினிதாய
வாராதகாதலராமருண்மிக்கார்கேட்டருள. (கூஎகூ)

வேறு.

ஆங்கதிலொருபெண்ணயரேநீருமாசறமாறன்முன்னுரைத்த
வோங்குசீர்த்திருவாய்மொழிகளாயிரமுமோதினதில்லைகொலென்ருள்
பாங்குறுமெதிகடலைவருமணங்கேயோதினேனென்றவண்பகர்ந்தார்
பூங்குழலாளுற்கூவுதல்வருதற்பொருளொருகூப்பிடுதூரம். (கூஅ0)

என்றறியீரோவென்றனள்கேட்டவுடையவரீதுமோரார்த்த
மின்றிவளிடத்திலிருந்ததேதிருமாமகளிவளாமெனவியந்து
சென்றவர்தாளிற்புரையறவணங்கிச்சீரியமுதலிகளோடு
மன்றவளகத்திலமுதுசெய்தருளித்துலைவிலிமங்கலத்தமர்ந்தே. (௬௮௧)

நின்றிருந்தவரைச்சென்றுறவணங்கிநிகரிலாமாடமாளிகைகள்
குன்றெனவளர்ந்தகுளந்தைமாயவனைக்கோதறுதொண்டர்களோடு
மன்றுறவிறைஞ்சித்தென்றிருப்பேரையமலனையடிதொழுதகன்று
மன்றல்சேர்வகுளத்தாரினன்புகழூரெங்கெனமற்றதிற்புகுந்தான். (௬௮௨)

## வேறு.

மாசிலாமதுரகவிவந்துதித்ததிருநகரொன்
றாசைபற்றித்தொழுதிறைஞ்சியன்பரொடும்வலஞ்செய்து
வாசவார்குழற்றிருவின்மணவாளன்கழல்வணங்கித்
தேசுறுசீர்ச்சிந்தையருந்திருக்குருகூர்ப்புறஞ்செறிந்தார். (௬௮௩)

## வேறு.

அண்டமுறுதிருவுங்கோபுரத்தெழிலையணிதிகழ்மாடமாளிகையை
விண்டலத்திலங்குந்திருமதிட்சிறப்பைவிசும்புறுகொடிகளைவிழியாற்
கண்டுறவணங்கியன்பர்களோடுங்காதன்மிக்குறவலஞ்செய்து
தெண்டிரைப்பொருநைச்சங்கணித்துறையிற்செறிந்துறுசெழும்புனலாடி. ()

## வேறு.

முருக்கிதழ்நிகர்க்குஞ்செய்யவாடையைமுறையிற்சாத்திக்
கருத்துறுதிருமண்காப்புங்கவின்பெறவணிந்துநீதித்
திருத்திகழ்மார்பிற்சோதித்திருமணிவடமுஞ்சேர்த்தி
யருத்தியிற்சிறந்தமுக்கோலண்டருந்துதிப்பவேந்தி. (௬௮௫)

## வேறு.

ஆங்குநின்றங்குருகூரைநோக்கியிதையருண்மாற
னோங்குமுளங்கொளுஞானத்திருத்துமெனவுரைசெய்தான்
பாங்குடன்மற்றதுகேட்டப்பாவியேன்முக்குறும்புந் (௬௮௬)
தாங்கியிருகாலாலேமிதிக்கின்றேனெனத்தளர்ந்து.

நின்றுநின்றுதள்ளாடிநெடுங்கண்கள்புனறதும்பச்
சென்றுகருடனைப்பணிந்துசீரியமாமேருவெனுங்
குன்றுநின்றதெனநின்றகோபுரத்தைக்கும்பிட்டாங் (௬௮௭)
கொன்றுந்தேவினையுள்ளியுள்புகுந்துதொண்டரொடும்.

### வேறு.

ஞானப்பிரானைவிமானத்தைநலங்கொடிருவைப்புவிமகளைக்
கானத்தேகியருந்தவத்தோர்கலக்கந்தவிர்த்தகருமணியை
வானத்தோங்குந்திருப்புளியைவலஞ்செய்திலங்குமறையுரைத்த
மோனத்திருந்தமகிழ்மாறன்றிருமுனெய்திமுழுமுதலே. (௬௱௮)

### வேறு.

சரணெனவணங்கியிதயதாமரையிற்றமிழ்மறையருளியஞானப்
புரணனையிருத்தியவனைமுன்னிட்டுப்பூமகள்பொருட்டினாலரக்கர்
முரணறத்தோங்கிப்பொலிந்துநின்றவனைமுடிவிலாவன்பொடுபுலனுங்
கரணமுங்கரையச்சென்றடிபணிந்தான்கருங்கடலடைத்தவற்கிளையான். ()

ஆங்குநின்றேகிவானமாமலையையடிதொழுதயன்பணிசெய்யுந்
தேங்கமழ்பொழில்சூழ்திருக்குறுங்குடியிற்செறிந்ததிற்றேவனைவணங்கிப்
பாங்கொடுதிருவாழ்மார்பரைப்பணிந்துபத்தர்கடுதித்தெழவேகி
யோங்குசீர்வாட்டாற்றினிதமர்ந்துறங்குமொருவனைத்திருவொடும்பணிந்தே. ()

### வேறு.

பொருவறுஞ்சீர்நிலைபானும்பூசுரர்கடொழுதேத்தத்
திருவநந்தபுரத்தமர்ந்துதிருக்கண்வளர்திருமாலை
மருவருஞ்சீர்த்தொண்டரொடும்வணங்கியதிற்சிலதினங்க
ளருமன்றேதெதிராசனமர்ந்திருந்தாங்கந்நாட்டில். (௬௧௧)

உறையும்புலவர்தமைவென்றாங்கோங்குந்தன்சீர்நாமத்தான்
மறையின்விதியான்மண்டபமொன்றாக்கியந்தமண்டலத்தி
லிறைவனருளாலுறைபவரையிலங்குந்தொண்டக்குலமாக்கு
முறையைநினைந்தானெதிராசன்மூவர்முதல்வனவையுணர்ந்தே. (௬௧௨)

### வேறு.

ஆங்கவர்கனவின்மன்னியாசிலாநிலையினானே
பாங்கொடித்தலத்துள்ளாரைப்பத்தராய்ப்பரிவிற்செய்தாங்
கோங்குவைகுந்தத்தேற்றநினைந்தனையுறுதியேலும்
தாங்குநற்குணத்தாயிந்தத்தலமொருகோணங்கண்டாய். (௬௧௩)

ஆதலாலிதனின்மன்னுநரர்களுமற்பமாகும்
காதன்மிக்குடையாயுன்றன்கற்பனையுறுதியாலே
கோதறமுத்திதன்னைக்குறுகுவரிருந்தாரெல்லா
மோதுமித்தலத்திலின்புற்றுறங்குநம்பணிகள்செய்வான். (௬௧௪)

ஒருவருமின்றிக்காடாழ்ற்றவித்தலமுமன்றிப்
பொருவறுங்குணத்தாயிவ்வூர்புகலும்வைகுண்டமென்ன
வருமறைவிதிப்பமாறனருளியபடியுங்கண்டாய்
கருதருமிதனின்பாங்குங்கைவலியங்களாகும். (௬௧௫)

பண்டருமறைகள்வல்லாய்பசியுளாரிருப்பமண்ணி
லுண்டவர்தம்மையூட்டலுறுதியோவுணருங்கால
மண்டலம்பெரிதுண்டோங்கும்வடதிசையதனிலேகிக்
கண்டநாடெல்லாநீயேதிருத்துதிகடிகவென்ன. (௬௧௬)

செப்பியப்பொழுதேகையாற்சிரியவெதிகள்வேந்தைத்
தப்பறுதமர்கள்தம்மைத்தாங்கியேழுலகந்தாங்கு
மப்பனுங்குருங்கைதன்னிலழகியநம்பியாகி
யொப்பறநின்றான்முன்பில்வைத்துமீண்டுறங்கலுற்றான். (௬௧௭)

### வேறு.

கங்குற்பொழுதிற்கருமுகிலைக்கனவிற்காணக்கண்வளருஞ்
செங்கட்கரியதிருமாலுக்கிளையானுகிச்செனித்தவன்பர்
பங்கிற்றோன்றுமெதிராசன்பரமன்பிரிந்தவுடன்பரிவோ
டங்கக்கனவினதிசயத்தையடிபார்க்கருளிச்செயவெழுந்தான். (௬௧௮)

### வேறு.

எழுந்திருந்தங்கேயெதிகளுபகனுரித்தலந்திருக்குறுங்குடியென்
றழுந்துயிர்த்துணையாந்தொண்டரையெழுப்பியாசறுகிலைமையீர்சொன்னற்
றெழுந்திருவநந்தபுரத்தினிற்படுத்தோமதுவன்றிச்சுருதியின்முடிவின்
கொழுந்தெனநின்றவழகியநம்பிகுருங்கைமாநகரிதுகுறியின். (௬௧௯)

என்றுரைத்தருளவவர்களுமெழுந்தாங்கிதென்கொலதிசயமென்ன
நின்றனர்திகைத்துநின்றழிக்கலவினீண்டவனுரைசென்றுரைத்த
வொன்றியபொருளைமுற்றவுமுரைத்தாருடையவர்முதலிகள்கேட்டாங்
*கன்றவன்றிறத்தைநினைந்துநைந்துருகியனவிடுமெழுகெனக்கரைந்தே. (௭௦௦)

### வேறு.

திருவநந்தபுரநகரைச்சீவைகுண்டமெனமாறன்
பொருவறுஞ்சீர்த்தமிழ்மறையிற்புகன்றதையும்பொன்னாழி
மருவருஞ்சீர்ச்சங்கேந்துமாமாயனுரைத்ததையும்
கருதிநின்றங்கதிசயித்தாரெதிராசன்கழல்வணங்கி. (௭௦௧

* கன்றவற்புதத்தை (பி-ம்.)

### வேறு.

எல்லாங்கிடப்பவின்றந்தோவெவணம்யாருமறியாதே
செல்லார்பொழில்சூழ்திருவநந்தபுரம்விட்டீண்டுச்செறிவித்தான்
சொல்லாயிந்தப்பெருந்திரளைச்சுருதிமுதல்வன்யாவர்க்கும்
நல்லாயென்றார்முதலிகண்மெய்ஞ்ஞானமிக்கானருள்செய்வான். (௭௦௨)

### வேறு.

தண்டுழாய்மாலைமார்பன்றமர்களையுலகமேழு
முண்டநாளறிந்தாருண்டோவுமிழ்ந்தநாளறிந்தாருண்டோ
பண்டைநான்மறைகளன்றிப்பன்றியாய்க்கோட்டிலேற்றுக்
கொண்டநாளறிந்தாருண்டோகோதறுபிரமனேனும். (௭௦௩)

உளந்தனாலுணர்ந்துகாணவல்லனோவுலகின்மேலாய்
வளர்ந்தநாளனைத்துந்தோயமாசறுமிருதாளாலே
யளந்தநாளறிந்தாருண்டோவாதலாலரக்கனாகம்
பிளந்தமாறனக்குமீதோர்பெருமையோபேசுங்காலே. (௭௦௪)

என்றுரைத்தெதிகணாதனெடுத்தவண்வைத்துப்போன
மன்றல்சேர்துளவினானைமற்றுநீமன்னுநாட்டை
யின்றுநான்பிருத்தவென்றேகினைகிலேயென்னவேத்தி
யன்றுசென்றனந்தானந்தபுரத்தினிலமலன்றன்னை. (௭௦௫)

பூங்கழலிறைஞ்சிவாழ்த்திப்பூவலஞ்செய்யப்புக்கா
னாங்குநின்றன்பின்மிக்கானன்பர்களோடுமேகிப்
பாங்குடனந்நாட்டுள்ளதிருப்பதிதோறும்புக்குத்
தாங்கியேழுலகுங்காக்குந்தலைவனைவணங்கிவாழ்த்தி. (௭௦௬)

எண்ணருஞ்சமயத்தாரிலிலங்குமேற்றிசையிலோங்கி
நண்ணிடும்புலவர்தம்மைநான்மறைமுடிவால்வென்று
மண்ணவர்வணங்கிவாழ்த்தவானவர்துதிசெய்தேத்த
வுண்ணிறையறிவின்மிக்கானுத்தரதிசையையுற்றான். (௭௦௭)

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

(௩அ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பன்மையு மொருமையும் பாலறி வந்த
215-வது சூத்திரம். அன்ன மரபிற் குறிப்போடு வரூஉங்
காலக் கிளவி யுயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியோடு வேறுபா டிலவே.

இச்சூத்திரத்திற்கு உரைகாரர்கள் மூவரும் ஒரேவிதமாகவே பொருள்கொண்டனர்.

இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் "'அன்னமரபின்' என்றதனான், ஈண்டு உயர்திணைக்கு ஓதிய பொருட்பற்றி அஃறிணை வினைக்குறிப்புந் தோன்றும் என்று கொள்க. வாலாறு: 'வடாது வேங்கடம் தெனாது குமரி' என்புழி, வடாது தெனாது என்பன; இது வினைக்குறிப்புப் பெயர். பிறவும் அன்ன" என்ற சொற்றொடர் இச்சூத்திரவுரையின் இறுதியில் உள்ளது. 'இன்றில வுடைய வென்னுங் கிளவியும்.......' (தொல். சொல். 220) என்னுஞ் சூத்திரத்தில் அஃறிணை வினைக்குறிப்பு எப்பொருளில் வருமென்பது தெளிவாய்க் கூறப்பட்டதால் இச்சொற்றொடர் இங்குப் பொருந்தவில்லை. அச்சூத்திரவுரையினிறுதியில் 'பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் தோன்றிநிற்கும் இலக்கணமுடைய வினைக்குறிப்புச்சொற்கள் மேற்கூறப்பட்ட அஃறிணை வினைச்சொற்கு ஈறாய்நின்று பாலுணர்த்தும் எழுத்துக்களின் உள்ளனவே தமக்கும் ஈறுவன, பிறிதில என்றவாறு' என்பதற்குமேல் ஒன்றுங் காணப்படாததால், இச்சொற்றொடர் இங்கு மாறுபாடாக எழுதியிருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது.

216-வது சூத்திரம். அவைதாம்
அவ்வ என வரூஉ மிறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பில் 'எனையெழுத்தின்முன் ஙகார ழகாரமொழித்து இன்பெற்று வரும்' என்ற பாடம் உளது. சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் ஙகார ழகாரம் என்பதற்குப் பிரதியாக ரகார ழகாரம் என்றுளது. முன்னர்க்கூறிய பாடமே பொருத்தமுள்ளது என்பது இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியத்திற் கொடுத்துள்ள உதாரணங்களால் விளங்கும்.

217-வது ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
சூத்திரம். துன்றிய லுகாத் திறுதி யாதும்.

பாடபேதம்:—சேனாவரையப்பதிப்புக்களிலும், நச்சினார்க்கினியப் பதிப்பிலும் இச்சூத்திரத்தில், 'தறடவூர்ந்த' என்ற பாடமே உளது. இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணப்பதிப்பில் 'தடறவூர்ந்த' என்ற பாடம் உளது. உரையிலும் 'தடறக்களையூர்ந்த' என்ற பாடமே உளது. ஆனால், 'ஒன்றறி கிளவி தறட வூர்ந்த—குன்றிய லுகரத் திறுதி யாகும்' (தொல். சொல். 8) என்னுஞ் சூத்திரத்தையும், இச்சூத்திரவுரையிற் கண்ட உதாரணங்களின் முறையையும் நோக்குங்கால் 'தறடவூர்ந்த' என்றும் 'தறடக்களையூர்ந்த' என்றுமே பாடம் இருக்க வேண்டும்.

220-வது இன்றில வுடைய வென்னுங் கிளவியும்
சூத்திரம். ..............................................

இச்சூத்திரவுரையிற் சேனாவரையத்திற் 'கிளந்தோதியவழியுஞ் சூத்திரஞ் சுருங்குமாகலா னென்பது' என்ற வாக்கியம் உளது. அங்கு உம்மை இல்லாவிடின் நலம்.

220, 221-வது சூத்திரங்களைச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் இரண்டு சூத்திரங்களாகக் கொண்டார்கள்; உரையாசிரியர் 214, 215-வது சூத்திரங்களை ஒரே சூத்திரமாகக்கொண்டதுபோல, இவ்விரு சூத்திரங்களையும் ஒன்றுகவே கொண்டனர்.

223-வது அவற்றுள், முன்னிலைக் கிளவி
சூத்திரம். இஐ ஆயென வநஉ மூன்று
மொப்பத் தோன்று மொருவர்க்கு மொன்றற்கும்.

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் 'உண்டி, தின்றி என இறந்த காலத்திற்கே பொருத்தமுடைத்தாய் இகரம் வரும்' என்றார். சேனா

வரையரும், நச்சினார்க்கினியரும் 'இகரம் தடறவூர்ந்து எதிர்காலம்பற்றி வரும்' என்றனர்.

உரையாசிரியர் 'ஒருகாலத்திற்கே யேற்கும் இகரம் முற்கூறினமையின் உண், தின், கிட, நட, வா, போ என்னுந் தொடக்கத்தன கொள்க' என்றார். சேனாவரையர் அவற்றை, 'செய்யா யென்னு முன்னிலை வினைச் சொற்—செய்யென் கிளவி யாகிட னுடைத்தே' (தொல். சொல். 450) என்னுஞ் சூத்திரத்தாற் கொண்டார்.

பாடபேதம்:—இளம்பூரணப்பதிப்பிலும், சைவசித்தாந்தக்கழகப் பதிப்பிலும் சூத்திரத்தில் ஒருவர்க்கும என்ற பாடம் உளது. தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பிலும், நச்சினார்க்கினியப்பதிப்பிலும் ஒருவற்கும் என்ற பாடம் உளது. ஒருவரென்பது ஆண் பெண் என்கின்ற இரண்டையுங் காட்டவேண்டுமாதலால், முன்னர்க்கூறிய பாடமே பொருத்தமானது.

224-வது சூத்திரம். இர் ஈர் மின்னென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய வென்மனார் புலவர்.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியத்தில் 'நடத்துவிப்பி, வருவிப்பி, நடப்பிப்பி எனவும் வரு'மென்று கூறி 'இவற்றை இருமடியேவலென்பாரும் உளர். இவற்றை இருகாலேவுதல் கூறியதுகூறலாமாதலின் இவை இழிவழக்கென மறுக்க' என்ற சொற்றொடர் உளது. இங்கு நச்சினார்க்கினியர் நன்னூலார்மதத்தைக் குறித்து மறுக்கின்றாரென்று தோன்றுகின்றது.[1] ஆனால் அவர் வருவிப்பி, நடப்பிப்பி என்றதனை ஈரேவல் என்று கொண்டாரல்லது நடத்துவிப்பி என்பதையும் ஈரேவலாகக் கொண்டதாகத் தெரியவில்லை. நடத்துவிப்பி என்பதை வீரசோழிய வாசிரியர் கூறுமாறு காரிதக்காரிதக்காரித தாது[2] என்றுவது

[1]செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் னேவ லிணையி னீரேவல் (நன். 138)

என்னுஞ் சூத்திரத்தைக் கவனிக்க.

[2]ஆட்டாற்று தீற்றுதி தாதுக் களையடற் காரிதமென்
றோட்டா வறிக வுரையின் படியொப்பில் விப்பிபின்பு
மூட்டா வறிகா ரிதக்கா ரிதமுன்பிற் றுதுவின்கட்
காட்டா வறியவை காரிதக் காரிதக் காரிதமே. (வீரசோ. தாதுப். 6.)

நாலேவல் என்றுவது கூறவேண்டும். 'இவற்றை இருகாலேவுதல் கூறியது கூறல்' என்று நச்சினார்க்கினியர்கூறுவது எவ்வாறுபொருந்தும்? ஓர் அரசன் அமைச்சனைநோக்கிப் பணியாளனால் சிற்பியை வருவிப்பி என்றால் அப் பிரயோகம் இழிவழக்காகுமா என்பது கவனிக்கத்தக்கது.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பில் 'அன்மை முதலாயின பொருள்பற்றி வந்தனவெனக் கிளந்தோதலாஞ் சுருக்கத்தனவகையானும்' என்ற பாடம் உளது. சைவசித்தாந்தக் கழகப்பதிப்பில் சுருக்கத்தனவகையானும் என்பதற்குப் பிரதியாகச் சுருக்கத்தனவன்மையானும் என்ற பாடம் உளது. பின்னருள்ள பாடந்தான் பொருத்தமானது. எவ்வாறெனில், அஃறிணைவினைக் குறிப்பு அன்மைப்பொருளினும், இன்மைப்பொருளினும், உண்மைப் பொருளினும்வருமென்று கூறுவதைவிட, அன்று, அல்ல, இன்று, இல, உள என்ற அப்பொருள்படும் வினைக்குறிப்பின் உருவங்களையே கூறுவது மாணாக்கர்க்கு எளிதில் விளங்குமாதலாற் சுருக்கமாகும்.

அவற்றுள்,

226-வது சூத்திரம்.
முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—முன்னிலை, தன்மை இரண்டிடத்துஞ் செல்வன வாகிய வியங்கோள்வினைச்சொல் சிறுவரவின எ-று.

சேனாவரையர்:—மேல் 'எஞ்சிய கிளவி' எனப்பட்ட ஏழனுள் வியங்கோட்கிளவி, முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டிடத்தோடு நிலைபெறாதாம்.

நச்சினார்க்கினியர்:—மேல் எஞ்சிய கிளவியென்னப்பட்ட ஏழனுள் ஏவற்பொருண்மையை முடித்தலை உணர்த்துஞ்சொல், முன்னிலையுந் தன்மையுமாகிய அவ்விரண்டிடத்துப்பொருளொடும், அஃறிணைக்கட் பெரும்பான்மையும் நிலைபெறாது ; உயர்திணைக்கட் பெரும்பான்மையும் நிலைபெறும் எ-று.

உரையாசிரியரும் சேனாவரையரும் கூறியுள்ளபொருள் சூத்திரப் போக்குக்குத் தகுந்ததாயிருக்கின்றது. நச்சினார்க்கினியர் கூறியுள்ள

பொருள் அவ்வாறில்லை.' 'முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு மன்னு தாகும்' என்பதற்கு 'அஃறிணைக்கட் பெரும்பான்மையும் நிலைபெறாது, உயர்திணைக்கட் பெரும்பான்மையும் நிலைபெறும்' என்ற பொருள் எவ்வாறு என்பது விளக்கவில்லை.

228-வது செய்து செய்யூச் செய்பு செய்தென
சூத்திரம். ...........................................

பாடபேதம்:—இச்சூத்திரவுரையில் தாமோதரம்பிள்ளை யவர்கள் சேனாவரையப்பதிப்பில் தூஉய், ஆய், என்ற பாடம் உளது. சைவ சித்தாந்தக்கழகப்பதிப்பில் தூஉய், தாஅய், என்ற பாடம் உளது. ஆய் முன்னரே எடுக்கப்பட்டிருப்பதாற் பின்னருள்ள பாடமே குற்றமற்றதென்பது பெறப்படும்.

232-வது ஏனை யெச்சம் வினைமுத லானு
சூத்திரம். மான்வந் தியையும் வினைநிலை யானுந்
தாமியன் மருங்கின் முடியு மென்ப.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் "வினையொடு முடிதல் ஈண்டுக் கூறப்பட்டமையின் எச்சவியலுள் [1]வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்.......'(தொல். சொல். 432) என்னுஞ் சூத்திரத்தில் "குறிப்பு முடிபாகும்' எனவமையும், வினையுமெனல் வேண்டாவெனின்' என்று ஆசங்கித்து, 'குறிப்புமென்னும் உம்மையாற் றழுவப்படுவது செய்தாகலிற் றெற்றென விளங்காமையானும், வினைமுதலென்பது பெயர்க்கும் வினைக்கும் பொதுவாகலானும் வினையுமெனல் வேண்டுமென்பது" என்று விடைகூறியுள்ளார்; இங்கு 'வினைமுதலென்பது பெயர்க்கும் வினைக்கும் பொது' என்பதின் பொருள், பெயர்ச்சொல்லுக்கு வினைமுதலாகி வருவது[1] வினைச்சொல்லுக்கு வினைமுதலாகிவருவது என இரண்டுக்கும் வினைமுதல் பொது என்பது.

233-வது பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சூத்திரம். ...........................................

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப்பில் 'ஓம்பா வீகை மாவே ரேவலி........' என்றுளது; சைவசித்தாந்தக்கழகப்

[1] ஆ பல என்னு மிடத்துப் பல வென்னும் பெயர்ச்சொல்லுக்கு ஆ வினை முதலாயிருப்பதைக் காண்க.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

பதிப்பில் 'ஓம்பா வீகை மாவே ளெவ்வி....' என்று பதிப்பித்துளது. பின்னருள்ள பாடமே பொருத்தமென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததே.

நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
234-வது வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
சூத்திரம். வவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—சொல்லப்பட்ட ஆறு சொல்லோடுமுடியும் அவ்விரண்டெச்சம் என்பது.

சேனாவரையர்:—செய்யும், செய்த என்னுஞ் சொற்கள், தொழின் முதனிலையெட்டனுள் இன்னதற்கு இது பயனாக என்னும் இரண்டொழித்து, ஏனை யாறுபொருட்கும் ஒத்த வுரிமைய.

நச்சினார்க்கினியர்:—செய்யும், செய்த என்னுஞ் சொற்கள் இன்னதற்கு இது பயன் என்னும் இரண்டொழித்து நிலப்பொருளுஞ் செயப்படுபொருளும் காலப்பொருளும் கருவிப்பொருளும் வினைமுதற்பொருளுமென்ற ஐந்துடனே வினைப்பொருளுங் கூடச்சொல்லப்பட்ட அவ்வாறு வகைப் பொருட்கும் ஒத்த உரிமையினை யுடையவாம்.

சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவ்விருவர்மதமும் ஒன்று. உரையாசிரியர்மதம் வேறு. உரையாசிரியர்மதத்தைச் சேனாவரையர் 'நிலம் முதலாயினவற்றைப் பெயரெச்சப்பொருளென்னாது முடிக்குஞ் சொல்லெனின், அவ்வறுபொருட்கு மென்னாது அவ்வறுபெயர்க்குமென்றோதுவார். ஓதவே, 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' (தொல். சொல். 433) என்னுஞ்சூத்திரம் வேண்டாவாம்' என்று மறுத்துள்ளார். இம்மறுப்பிற் கூறியவாறு அவ்வறுபெயர்க்கும் என்று ஆசிரியர் சூத்திரித்திருப்பின், நிலன், பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை, இச்சொற்களுக்குமாத்திரம் செய்யும், செய்த இவ்விரண்டும் ஒத்தவுரிமைய என்றாகுமே யொழிய அப்பொருளைக்கொண்ட சொற்களுக்கும் அவை ஒத்த வுரிமைய என்றாகாது. மேலும் 'பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே' என்னுஞ் சூத்திரம் பெயரெஞ்சுகிளவிக்கு முடிபுகூறுகின்றதென்றும், இச்சூத்திரம் அம்முடியுஞ்சொல்லாகிய பெயர் இன்னின்னபொருளில் வருமென்பதை விரிக்கின்றது என்றும் கூறிற் குற்றமென்னை?

(தொடரும்.)

# மறைஞானசம்பந்தர்.

திரு. அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள் பழந்தமிழ்நூலாசிரியர் ஊர் பெயர் முதலிய விவரங்கள் மாறுபட்டுக்கிடக்கின்றன வென்றும் அவற்றைத் தமிழர் ஒருவழிப்படுத்த முயலல்வேண்டுமென்றுங் கூறி, அதற்கு எடுத்துக்காட்டாக மறைஞானசம்பந்தரைக்குறித்துக் காணப்படுவனவற்றைச் செந்தமிழ்ச்செல்வியில் எழுதினார்கள். அம் மறைஞானசம்பந்தரைப்பற்றிப் பின்னும் காணப்படுவனவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன்.

1. மறைஞானசம்பந்தர்
2. மறைஞானசம்பந்ததேசிகர்
3. மறைஞானசம்பந்தநாயனார்
4. சிதம்பரம் மறைஞானசம்பந்ததேசிகர்
5. சிதம்பரம் மறைஞானசம்பந்தநாயனார்
6. மறைஞானதேசிகர்

எனப் பலபெயர் நூல்களிற் காணப்படுகின்றன.

திரு. அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள், "சிவஞானசித்தியார் உரையியற்றிய மறைஞானசம்பந்தர் ஒருவர்; சிவதருமோத்தரம் அருணகிரிப்புராணம் முதலியன இயற்றியவர் வேறு ஒருவர்" என முடிவுகட்டினார்கள். பின்னவர் சிதம்பரம் குகைமடத்தில் வாழ்ந்து வந்தவர் என்றும் எழுதினார்கள். இவர்கள் இருவரும் வேறு என்று அவர் கூறுவதற்கு ஆதாரம் வாமதேவ முருகபட்டாரகர் அச்சிட்ட அருணகிரிப்புராணமாகும். இந்நூல் கலி 4655-க்குக் கி. பி. 1553-ல் மறைஞானசம்பந்தரால் இயற்றப்பெற்றதென்று அதன் பாயிரத்துட் காணப்படுகிறது.

திரு. L. உலகநாதபிள்ளையவர்கள். 1. பரமோபதேசம் 2. சிவமயம் 3. கமலாலயபுராணம் 4. சிவதருமோத்தரம் 5. பதிபசுபாசப்

பனுவல் 6. சங்கற்பநிராகரணம் 7. முத்திநிச்சயம் என்ற நூல்களை இயற்றியவர் மறைஞானசம்பந்தர் என்றும், இவர் கமலாலயபுராணம் இயற்றிய காலம் கலி. 4677-க்கு கி. பி. 1545 என்றும் எழுதியிருக்கின்றார்கள்.

திருமயிலையில் வாழும் சே. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் கண்கட்டிமடம் மறைஞானசம்பந்தர் செய்யுள்விளக்கம், சகலாகமசாரம் முதலியனவும்; சிதம்பரம் மறைஞானதேசிகர் அருணகிரிப்புராணம், சிவதருமோத்தரம் முதலியனவும் ; சந்தானாசாரியரான மறைஞானசம்பந்தர் சிவஞானசித்தியாரும் ; மற்றொரு மறைஞானசம்பந்தர் சிவஞானசித்தியாருரையும் இயற்றியுளரெனக் கூறினார்கள். அவர்கட்குக் கிடைத்த ஆதாரம் இவையெனக் காட்டினாரில்லை. இவற்றின் வன்மை மென்மைகளை ஆராய்வாம்

சந்தானாசாரியரும் சிவஞானசித்தியார் ஆசிரியருமான மறைஞானசம்பந்தர் திருப்பெண்ணாகடத்திலே வாழ்ந்தவரென்பவர்கூற்றுக்கு ஆதார மென்னவென்று விளங்கவில்லை. உமாபதிசிவாசாரியசுவாமிகள் காலம் கி. பி. 1328—ஆகவே அவருடைய ஆசிரியராகக்கருதப்படும் மறைஞானசம்பந்தரும் அதேகாலத்தினரென்றாவது சற்றுமுன் இருந்தனர் என்றாவது கொள்ளல் தவறாகாது.

இனி இவரது காலம் பதின்மூன்றாம்நூற்றாண்டின் இறுதியாகக் கொள்வோமானால் அருணகிரிப்புராணம், கமலாலயபுராணம் முதலியன இயற்றிய மறைஞானதேசிகர் வேறு என்பதும், காலத்தாற் பிற்பட்டவரென்பதும் உறுதிபெறும். இவரைப்பற்றிய செய்திகளை யாராய்வாம். *கமலாலயபுராணம் செய்தகாலம்,—

"ஆண்டுகலியுகத்துக்கநானூற்றுமுப்பத்தீராயிரத்து
ளீண்டியநாலாயிரமுமறுநூறுமெண்ணைந்துமேழுஞ்செல்லப்
பூண்டபராபவவாண்டில்..............................."

என்று அப்புராணத்துட் காணப்படுகிறது. இவ்வாண்டு கி. பி. 1545 ஆகிறது. இதனை நிறுத்தி அருணகிரிப்புராணத்தை யாராய்வோமானால்

*இது பதினெட்டுச்சருக்கங்களோடு சற்றேறக்குறைய ஆயிரஞ்செய்யுள் தளையுடையதொரு நூல், இன்னும் அச்சேறவில்லை.

அந்நூல் கி. பி. 1553-ல் இயற்றப்பெற்றதென்று விளங்கும். ஆகவே இவர் இவ்விருபுராணங்களும் இயற்றியவரென்பதும், இவர் கமலாலய புராணம் இயற்றியபின்னரே அருணகிரிப்புராணம் இயற்றினரென்பதும் பெறப்படும். இந்நூல்களையன்றிப் பின்னும் பலநூல்கள் இவர் இயற்றியனவாகக் காணப்படுகின்றன. பதிபசுபாசப்பனுவல் என்னும் சித்தாந்தநூலின் பாயிரத்தில்,—

"காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீதுறை தில்லையிற்
கனக சபையிற் பனக முனிவனும்
மாதவ விரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரு
மருமா மறையா லடிபணிந் தேத்தப்
பானு கம்பர் பணிலமும் வாண
ஞன குடமுழ வாதியு முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாய்த்
தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தி யினானுஞ் சிந்தனை பண்ணி
யப்பதி தன்னி லருங்குகை மடத்தி
லெப்பதி யோரு மேத்தவு மிருந்தோன்
இகமது தன்னிற் சுகனையொப் பானோன்
வெண்ணெயம் பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டும் வருதலொப் பானோன்
அருந்தமி ழுணர்வா லகத்திய முனியெனத்
திருந்துதொல் காப்பியஞ் சிவமயஞ் செய்தோன்
ஆசில் வடநூற் போச ராசன்
ஆதி கமலா லயமுதற் புராணம்

ஓது மதியாற் சூதனை யொப் போன்
மூவர் முதலா முதியவர் பாடல்
ஆவ னுடனே யடங்கலு முணர்ந்தோன்
நவமிகு நூல்கள் நானு விதத்துடன்
சிவதரு மோத்தரந் தமிழாற் செய்தோன்
ஆகம பண்டிதன் அருந்தவர் புகலும்
மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோன்
நண்ணிய தவமறை ஞானசம் பந்தன்"

எனக் காணப்படுவதால் இவர் குகைமடத்தில் வாழ்ந்தவர் என்பதும் தொல்காப்பியம், சிவமயம், கமலாலயபுராணம், அருணகிரிப்புராணம், சிவதருமோத்தரம், பதிபசுபாசப்பனுவல், என்ற நூல்களை இயற்றினர் என்பதும் பெறப்படும். சங்கற்பநிராகரணம், பரமோபதேசம், முத்திநிலை சைவசமயநெறி ஆகிய நூல்களின் சிறப்புப்பாயிரத்தால் இவைகட்கும் இவரே யாசிரியர் என்பதும் பெறப்படும்.

தொல்காப்பியம், சிவமயம் என்பன எவ்வகையான நூல்களென்று இதுபொழுது அறிவதற்கில்லை. புராணங்களைப்பற்றி முன்னர்க்கூறினும். ஆகமபண்டிதர் என்பதற்கேற்ப இவர் சிவதருமோத்தரம் இயற்றிய தொன்றே போதியதாம். சிவதருமோத்தரம் இவர் இயற்றியதாக நூலிற் காணப்படாவிடினும், இச்செய்தி மேற்காட்டிய ஆசிரியப்பாவிற் காணப் படுவது கொண்டு தெளிவுறுகின்றோம். சங்கற்பநிராகரணம், பரமோப தேசம், முத்திநிலை முதலியன சைவசித்தாந்த சாத்திரங்கள். பரமோப தேசம் அச்சிடப்பட்டுள்ளது. திரு. உலகநாதபிள்ளையவர்கள் முத்தி நிலையை முத்திநிச்சயமாக நினைத்தனர் எனத் தெரிகிறது. பின்னையது தருமை யாதீனத்தை முதலில் நிறுவிய ஞானசம்பந்தர் செய்தது. அம் மடத்தைச்சார்ந்த சிவானந்தமுனிவர் முத்திநிலை முப்பதவசர மென ஒருநூல் செய்துள்ளார். அஃது இதனினும் வேறு.

மறைஞானசம்பந்தர் சிதம்பரத்திலுள்ள குகைமடத்தில் வதிந்தவ ரென முன்னர்ச் சொன்னேம். அதற்குக் 'கண்கட்டிமடம்'என வேறொரு பெயரு முண்டெனத் தெரிகிறது. அதனிலிருப்போர் திரைபோட்டுக்

கொண்டிருப்பதின் காரணம் விளங்கவில்லை. இப்பெரியார் அம்மடத்தி லிருந்துகொண்டு பலருக்குச் சாத்திரமுதலிய பாடங்கள் பயிற்றுவித்து வந்தார் என்று தெரிகிறது. பிராயச்சித்த சமுச்சயம் என்ற நூலைத் தமிழில் யாத்தவர் இவருடைய சீடர். பிராயச்சித்தசமுச்சயமுடையார் தம் குருவைத் துதிசெய்யும் செய்யுள்,

"தங்கு முலகம் பரவுதிரு விசைப்பா வுரைத்த தலைவருமன்
பங்க மெனவுற் றிடுமறுபத் தொடீமு வருமா கமந்தமிழ்செய்
திங்க ளுரிஞ்சு மணிமாடத் தில்லைக் குகையிற் றிரைபோட்டுப்
பங்க மறவாழ் மறைஞான சம்பந் தனுகம் பதியாவார்"

என்பதாம். இந்நூல் பாடியது கொல்லம் 808 ஆகவே கி. பி. 1623 ஆகும். இவரது ஆசிரியர்காலம் இவருக்கு முன்னுதல் காண்க. இவைக ளால் மறைஞானசம்பந்தரே மடாதிபதியாக விருந்தமைபற்றி மறை ஞானசம்பந்ததேசிகர் எனப் பிற்காலத்தார் கூறினர் என்று கொள்வது தவறாகாது.

மறைஞானசம்பந்தநாயனுர் வேளாளரென்றும். 1. சிவஞானசித்தியார் உரை, 2. சைவசமயநெறி, 3. பரமததிமிரபாநு, 4. சங்கற்பநிராகரணம், 5. இறைவனூற்பயன், 6. பஞ்சாக்கரமாலை, 7. சிற்றம்பலநாடிமாலை, 8. மகாசிவராத்திரிகற்பம், 9. மாதசிவராத்திரிகற்பம், 10. சோமவார சிவராத்திரிகற்பம், 11. சோமவாரகற்பம், 12. வருத்தமறவுய்யும்வழி, 13. உருத்திராக்கவிசிட்டம், 14. திருக்கோயிற்குற்றம், 15. அருண கிரிப்புராணம். 16. சிவதருமோத்தரம் ஆகியநூல்களெல்லா மியற்றின ரென்றும், சிவராத்திரிகற்ப முகவுரையில் எழுதப்பட்டிருக்கிறது. இப் புத்தகமும் மற்றை விரதகற்பங்களும் சிதம்பரம் ஈசானமடம் திரு. இராமலிங்க அடிகள் ஒப்புநோக்கியதாகலின், அவர்கள் தாம் அறிந்த வற்றையோ கேட்டவற்றையோ கூறக் கேட்டவர் எழுதியதாகவேண்டும். ஆயினும், மேலேகூறப்பட்ட 16 நூல்களுள் சைவசமயநெறி, சங்கற்ப நிராகரணம், அருணகிரிப்புராணம், சிவதருமோத்தரம் என்பன குகை மடம் மறைஞானதேசிகரால் இயற்றப்பட்டன என்று காட்டினும்: மற் றையநூல்களுள் அச்சிடப்பட்ட மகாசிவராத்திரிகற்பம் சோமவார கற்பம், வருத்தமற வுய்யும்வழி, உருத்திராக்கவிசிட்டம் திருக்கோயிற்

குற்றம் என்ற இந்நூல்கள் மறைஞானசம்பந்தநாயனார் இயற்றியதாக இந்நூல்களை வெளியிட்டவர் கூறினாரேயன்றி அக்கூற்றுக்கு உற்ற ஆதாரமொன்றும் நூல்களிற் காணப்படவில்லை. உருத்திராக்க விசிட்டத்தின் இறுதியில்,

> சாற்றினனே கண்டிவரந் தன்னையெணிச் சம்பந்த
> னாற்றினையுஞ் செஞ்சடைமே லார்வித்தான்—கூற்றினைக்கொன்
> றந்தணனைக் காத்தா னமர்ந்திலங்கு தில்லைவனத்
> தந்தமில்லான் றண்ணருளா லாய்ந்து.

என்று ஒரு வெண்பா காணப்படுகிறது. இச்செய்யுளை யுற்றுநோக்கும்போது ஆசிரியர் தோத்திரமாகக் காணப்படுகிறது. 'சிதம்பரத்தின் கண்ணே வாழும் சம்பந்தன் அருளுட்கொண்டு கண்டிநூல் சாற்றினேன்' என்று அச்செய்யுள் காட்டுகிறது. ஆகவே இந்நூலையும் அந்நூலொடு சேர்ந்து காணப்படும் கற்பநூல்களையும் இயற்றினவர் சம்பந்தர் என்ற ஒருவரது மாணாக்கர் எனக் கொள்வதும் தவறாகாது.

சிற்றம்பலநாடிமாலை யென்னும் நூலொன்று மறைஞானசம்பந்தநாயனார் இயற்றியதாகக் கற்பநூற் பதிப்பாசிரியர் ஈ. இரத்தினவேலு முதலியார் எழுதியிருக்கின்றார். சிற்றம்பலநாடிகள் உமாபதிசிவத்திற்கு 4 தலைமுறைக்குப்பிற் காணப்படுவதால் அவர் உமாபதிசிவம் வாழ்ந்த கி. பி. 1328-க்கு ஒருநூற்றாண்டுக்குப்பின் வாழ்ந்தவரென்று கொள்ளலாம். இதனாலே சிற்றம்பலநாடிகளைப் பாமாலையால் துதித்தவர் அவர் காலத்தவராய் இருக்கவேண்டும். சிற்றம்பலநாடிவெண்பா என ஒரு நூலுண்டு. 66 செய்யுட்களுடையது. அதுவாக இருந்தாலுமிருக்கலாம். பின்வந்தோர் முன்காலத்துவந்தோரைத் துதிப்பதில்லையா? திருவாவடுதுறை ஆதிகுருமூர்த்தியாகக் கருதப்படும் நமசிவாயமூர்த்திகளைப் பஞ்சாக்கரதேசிகர்மாலை, பஞ்சாக்கரப்பஃறொடை முதலிய நூல்களாற் சென்ற நூற்றாண்டிலிருந்தார் துதிக்கவில்லையா? கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்த ஞானசம்பந்தப்பெருமான்மீது கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்த நம்பியாண்டார்நம்பி பலநூல்கள் இயற்றவில்லையா? அவ்வாறிருக்க; இஃது எவ்வாறு பொருந்துமென வினாவெழுமாயின் அவ்வாறு ஒரு அன்புடையார் இருந்தனர் என்று காட்டும் வரையில் அச்செய்தி பொதுவாக ஒப்புக்கொள்வது வழக்காறன்று. இஃதன்றி

அச்சிற்றம்பலநாடிகளைப்பற்றியே சிலநூல்களும் அவரதுமாணவர்களால் அக்காலத்திலேயே பாடப்பட்டு அவையும் அச்சேறியிருக்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கவை. பஞ்சாக்கரமாலையும் இந்நூலும் மறைஞான சம்பந்தரன்றி வேறொருவரால் செய்யப்பட்டிருக்கலாமெனத் திரு. அநவரதவிநாயகம்பிள்ளையவர்களும் கருதுகின்றார்கள். பஞ்சாக்கரமாலை 60 வெண்பாவாற் பஞ்சாக்கரத்தைப்பற்றிக் கூறுமொருநூல். அதனீற்றில்,

> காழி நகர்வாழி கவுணியர்கோன் றாள்வாழி
> வாழியருட் கண்ணுடைய வள்ளல்தா—ளேழிசையின்
> றெய்வத் தமிழ்ப்பாடல் வாழி திருநெறியாஞ்
> சைவத் தவர்வாழி தான்.

என்ற செய்யுள் காணப்படுகிறது. பிள்ளையவர்கள் கூறுகிறபடி கண்ணுடையவள்ளலார் வழிவந்தார்செய்த நூலாகவுமிருக்கலாம். அஃதே போன்று வருத்தமறவுய்யும்வழியு மிருக்கிறது. இவைகளை யாராய இப்போது போதிய சாதனங்க ளில்லை.

ஆகவே மறைஞானசம்பந்தநாயனுர் என் றொருவர் இருந்ததாக ஈக்காடு இரத்தினவேலுமுதலியாரவர்கள் கூறும் கூற்றுக்கு நூல்களில் ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. இது, இவர் பிழைபடக் கூறியதாகத் தோன்றுகிறது.

இனி, சிவஞானசித்தியார் உரை யியற்றிய மறைஞானசம்பந்தர் மேற்காட்டியவர்களுள் ஒருவரா? அன்றி வேறொருவரா வென ஆராய்தல்வேண்டும். சித்தியார் அறுவருரைப்பதிப்பில், பதிப்பாசிரியர் 'திருமறைஞானதேசிகர் சீகாழிப்பதியில் திருஞானசம்பந்தமூர்த்திகளின் திருவடியார்களில் வள்ளல்கள் அறுபத்துநால்வருள் ஒருவராகிய ஆளவந்தவள்ளல் சந்தானத்தைச் சேர்ந்தவர்' என்றும் அந்தணர் என்றும் மற்றும் பலவும் எழுதியுள்ளார். "திரு" என்பது ஸ்ரீ என்பதுபோல அடைமொழியாக விருத்தலால் இவர் பெயர் மறைஞானதேசிகரென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. இப்படி யொரு பெயர் வழக்கிலுண்டா வென ஆராய்வோமாயின் இன்றும் இப்பெயர் சோழநாட்டில் வழக்காற்றிலிருக்கின்றது. பெயர்வேற்றுமைகொண்டு சித்தியார் உரையாசிரியர்

முன்னவர்களினின்றும் வேறு என்பது தெளிவுபெறும். இனி இவர் பெயர் மறைஞானதேசிகர் என்று வழங்கிற்ரு? அன்றி வேறுவிதமாக வழங்கிற்ரு? என ஆராய்வோமாயின் சித்தியா ருரைமுடிவிலே,

நிலையடைய வனுதினமு நினையெனது மனமே
தொலைவிலரு டருமகனு மலமுமுறு துயரு
மலையுடைய வனதுமட மதியுடைய வருளு
முலைவின்மறை ஞானமுனி யுரைசெய்திரு மொழியே.

என்பதால் மறைஞானமுனிவர் என்று வழங்கியதென அறியலாம். இத னுலே இவர் ஏதாவது ஒரு மடத்தைச் சார்ந்தவராகவிருக்கவேண்டு மென்று தோற்றுகிறது. அறுவருரைப்பதிப்பாசிரியர் வள்ளல்சந்தா னத்தைச் சார்ந்தவரென்று கூறிபதற்குரிய ஆதாரங்கள் இவையாமெனத் திட்டமாக இதுபோது ஆராய்வதற் கில்லை. அது மற்ருெருமுறை ஆரயப்படும்.

இதுவரை யாராய்ந்தவற்ருல் 1. மறைஞானசம்பந்தர் சந்தான சாரியருள் ஒருவரென்பதும் 13-ஆம் நூற்ருண்டில் வதிந்தவ ரென்பதும், 2. மறைஞானசம்பந்தர், மறைஞானசம்பந்ததேசிகர், சிதம்பரம் மறைஞானதேசிகர் எனப் பலபெயர்கொண்டார் ஒருவரே யென்பதும் இவர் பதினாரும்நூற்ருண்டில் வாழ்ந்தவ ரென்பதும், மறைஞானசம்பந்தநாயனர் என ஒருவ ரில்லையென்பதும் மறைஞான தேசிகரும் மறைஞானமுனிவரும் ஒருவரே யென்பதும் அவர்காலம் திட்டமாக இதுபோது தெரியவில்லையென்பதும் பெறுகின்ருேம்.

சோமசுந்தரதேசிகன்.

---